**EX/REC/26/06**

# கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk இணையத்தளத்தில் Exams என்பதன் கீழுள்ள Online Application ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும் 2026.05.26 மு.ப. 9.00 மணி தொடக்கம் 2026.06.22 பி.ப. 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் செயலாளர், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எழுத்துமூலப்பரீட்சை நடாத்தப்படும்.

## 02. ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்:

2.1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தொழிற் பரீட்சைக்கு (Trade Test) அழைக்கப்படுவதோடு தொழிற் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும் தொழிற் பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசையின் படி நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு வெற்றிடங்கள் நிலவுகின்ற அலுவலகங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3. இந்நியமனம் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4. குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த அரச / கிழக்கு மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின், திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும். திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இந் நியமனம் புதிய நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

## 03. பொதுவான தகைமைகள் :

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும் இவ் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) வருடங்களில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்து கொண்டிருத்தல் வேண்டும் (நேர்முகப்பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)
iii. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 5' அடி உயரமுடையவராக இருத்தல் வேண்டும்.
v. வீதி ஒழுங்குமுறைச் சட்டம் பற்றிய போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
vi. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இவ் அறிவித்தலின் மூலம் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
vii. மதகுருமார் மற்றும் பெண்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## 04. வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(தற்போது கிழக்கு மாகாண / அரச சேவையில் நிரந்தர பதவியில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

## 05. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :

### 5.1. கல்வித் தகைமைகள் :

அ) க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (சிங்கள அல்லது தமிழ்) உள்ளடங்கலாக குறைந்தது 02 திறமைச்சித்தி (C) உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூன்றாம் நிலை அல்லது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 3 சான்றிதழ்.

### 5.2. தொழிற் தகைமைகள் :

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட 'B' மற்றும் 'C' தர பிரிவுகளையுடைய வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும். (பழைய வாகன அனுமதிப்பத்திரமாயின் 'C, C1' மற்றும் 'B' தர பிரிவுகளை பெற்றிருத்தல் வேண்டும்)

### 5.3. சேவை அனுபவம் :

மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்பு மோட்டார் வாகன சாரதியாக குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். (அனுபவமானது சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்)

### 5.4. உடற் தகைமைகள் :

பகல் மற்றும் இரவு நேரங்களில் கடமையாற்றக்கூடியதாக சிறந்த கண்பார்வையினைக் கொண்டிருப்பதுடன் உடல், உள ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது அரச மருத்துவ அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலமாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

## 06. சம்பள அளவுத்திட்டம் :

2025.03.25ஆம் திகதிய 10/2025இற்கு அமைவாக அரசாங்க நிர்வாகச் சற்றறிக்கையின் சம்பள தொகுதி PL 03-2025க்கு ஏற்ப மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. 42,780.00 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 – 12 x 630 – 66,540/- ஆகும். எவ்வாறாயினும் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரொருவருக்கு இச்சம்பளத்திற்கு உரித்தாவது 2027.01.01ஆம் தினத்திலிருந்தாகும். நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து இச்சுற்றறிக்கை அட்டவணை IIIஇல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

## 07. ஆட்சேர்ப்பு முறை :

7.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட சாரதிகள் சேவையின் ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் இவ்வறிவித்தலின் மேலே 2.2இன் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது.

7.2 நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் 80% திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

## 08. பரீட்சைக்கட்டணம் :

பரீட்சைக்கட்டணம் ரூபா. 1000/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை நிகழ்நிலையில் பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பரிதியினை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக்கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக்கட்டளை, முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09. பரீட்சை நிபந்தனைகள் :**

9.1. பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை (online) ஆங்கில மொழி மூலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். இவ் பரீட்சை தொடர்பாக விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய முன்னர் அறிவித்தலை நன்கு வாசித்து அதில் கூறப்பட்டுள்ளவாறு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியின் செல்லுப்படியான பிரதியொன்றை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளது என கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி சேவை ஒன்றின் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலமாகவே அறிவிக்கப்படும்.

9.2. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலம் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

9.3. பரீட்சை நடைபெறும் குறித்த காலப்பகுதிக்கு முன்னர் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் தொடர்பான குறுஞ்செய்தியினூடாகவும் (SMS), மின்னஞ்சலூடாகவும் (E-mail) அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிட்ட பின்னர் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தியொருவர் இருப்பின், அது தொடர்பில் எமது 026-2228368 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**10. விண்ணப்பிக்கும் முறை :**

10.1. நிகழ்நிலையில் (online) விண்ணப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதியை (Printout) தரவிறக்கம் செய்து, தரவிறக்கம் செய்த விண்ணப்படிவத்தில் தமது கையொழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டியதை பூர்த்தி செய்தும், பற்றுச்சீட்டின் முலப்பிரதியை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தியும் **“செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை**” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்கால தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

10.2. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் EX/REC/26/06 என்பதை குறிப்பிடுவதோடு “கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016” என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**11. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

**12. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். தமது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை அதிபர், சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 854,880/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண அரச சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் சான்றுப்படுத்தி, அதனை திணைக்களத்தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

13. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

14. **பரீட்சைக்கு தோற்றுதல்:**

14.1. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

14.2. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை A4 தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து அச்சுப்பிரதியை (printout) எடுத்து இந்த அறிவித்தலின் 12ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

14.3. பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

14.4. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது அல்லது பொய்யான தகவல்களை வழங்கி பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.

15. **பரீட்சைத்திட்டம் :**

இப்பரீட்சைகள் எழுத்துப்பரீட்சை, தொழிற்பரீட்சை (Trade Test) எனும் பகுதிகளை கொண்டிருக்கும். எழுத்துப்பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

15.1. **எழுத்துப்பரீட்சை :**

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |

**உளச்சார்பு** : இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்க சிந்தனை, பகுப்பாய்வுத்திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல், கணிதத்திறன் மற்றும் பொது நுண்ணறிவு என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

**பொது அறிவு** : இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்து முறைமை, வீதிச்சமிக்ஞைகள், போக்குவரத்து சட்டங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்து முறைகள் பற்றிய பொது அறிவு, மிக முக்கியமான உள்நாட்டு மற்றும் தேசிய முறைகள், அரசியல், கலாச்சார, சமூக, விளையாட்டு சம்பந்தமாக சோதனையிடும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு :**

எழுத்துப்பரீட்சையின் போது சித்தியடைந்துள்ளதாக கருதப்படுவதற்கு அனைத்து வினாப்பத்திரங்களிலும் தனித்தனியாக 40% புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளை பெறுதல் வேண்டும். எவ்வாறெனினும், மேலே குறிப்பிட்ட புள்ளியின் வரையறைக்கமைய தேவையாக உள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோரின் உடன்பாட்டுடன் அப்புள்ளி அளவினை குறித்த மட்டமொன்றிற்குக் குறைப்பதற்கு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

**15.2. தொழிற் பரீட்சை (Trade Test):**

<table>
<tr><th colspan="2">பாடங்கள்</th><th>அதிகபட்ச புள்ளிகள்</th><th>சித்தியடைவதற்கான புள்ளிகள்</th></tr>
<tr><td colspan="3">வாகனம் செலுத்துதல் மற்றும் பெருந் தெருக்கள் குறியீடுகள்</td><td rowspan="6">50</td></tr>
<tr><td>(i)</td><td>வாகனம் செலுத்தும் திறன்</td><td>50</td></tr>
<tr><td>(ii)</td><td>வீதி சமிக்ஞை மற்றும் பெருந்தெருக்கள் சமிக்ஞை தொடர்பான அறிவு</td><td>30</td></tr>
<tr><td>(iii)</td><td>பயணிகள் பாதுகாப்பு</td><td>10</td></tr>
<tr><td>(iv)</td><td>மோட்டார் பொறிமுறை தொடர்பான அடிப்படை அறவு</td><td>10</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>100</td></tr>
</table>

**16. பரீட்சை நிலையம் :**
பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் இலக்கமும்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| திருகோணமலை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| அம்பாறை | 03 |
| கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**17.** நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**18.** தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

**19.** இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவு தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் படி நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**ஜே. லியாகத் அலி**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
26.05.2026